**Copies can be had from the Assistant Director, Government Publication Depot, 110, Anna Salai, Chennai-600 002.**

©

**Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing, Chennai-600 002.**

வெளியீடு : Issued :

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**வெள்ளிக்கிழமை, மே 27, 2011—தொகுதி 1—எண் 2**

**Friday, the 27th May 2011—Volume 1—No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009**

விலை ரூ. **3.00]** **[Price Rs. 3.00**

**27–5–2011**

## உள்ளடக்கம்


| | | பக்கங்கள் |
|---|---|---|
| **1.** | **உறுப்பினர்கள் பதவிப் பிரமாணம் அல்லது உறுதிமொழி எடுத்துக்கொள்ளுதல்** | 17-18 |
| **2.** | **பேரவைத் தலைவர் தேர்தல்** | 18-19 |
| **3.** | **பேரவைத் துணைத் தலைவர் தேர்தல்** | 19-20 |
| **4.** | **பேரவைத் தலைவருக்கும், துணைத் தலைவருக்கும் பாராட்டுரைகளும், நன்றியுரைகளும்** | 20-53 |
| | மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் | 20-23 |
| | திரு. விஜயகாந்த் | 23-25 |
| | திரு. மு.க. ஸ்டாலின் | 25-27 |
| | *திரு. அ. சவுந்தரராசன் | 27-29 |
| | திரு. எம். ஆறுமுகம் | 29-31 |
| | திரு. கே. கோபிநாத் | 31-32 |
| | திரு. ஜெ. குரு என்கிற குருநாதன் | 32 |
| | *முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா | 33-35 |
| | *டாக்டர் க. கிருஷ்ணசாமி | 35-37 |
| | திரு. பி.வி. கதிரவன் | 37-38 |
| | திரு. ரா. சரத்குமார் | 38-40 |
| | *மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா | 40-46 |
| | *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் | 47-49 |
| | மாண்புமிகு பேரவைத் தலைவர் | 49-53 |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2042 – வைகாசி 13

## 2011 மே 27, வெள்ளிக்கிழமை

*சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர்* **முனைவர் செ.கு. தமிழரசன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர்:**

“ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு”

மேதினி போற்றும் சான்றோர்க்குக் கிடைக்கப்பெற்ற சிறப்பும், பெருமையும் வறட்சியான நிலத்தில் வாடித் தவிக்கும் மக்களுக்குக் கிடைத்த நீர் நிறைந்த குளத்திற்கு ஒப்பானதாகும்.

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

## 1. உறுப்பினர்கள் பதவிப் பிரமாணம் அல்லது உறுதிமொழி எடுத்துக்கொள்ளுதல்

**மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர்:** பதினான்காவது சட்டமன்றப் பேரவைக்குப் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட, உறுதிமொழியை எடுத்துக்கொள்ளாத உறுப்பினர்கள் எவரேனும் இருப்பின், அவர்கள் இப்போது உறுதிமொழியை எடுத்துக்கொள்ளலாம். இந்திய அரசமைப்புச் சட்டத்தின்படி உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக்கொண்ட பிறகே பேரவையில் அமர வேண்டும்.

இப்பொழுது உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக் கொள்வதற்கு, செயலாளர் உறுப்பினர்களது பெயர்களைக் குறிப்பிட்டு அழைப்பார்.

*(பின்னர், செயலாளர் உறுப்பினர்களை உறுதிமொழி எடுத்துக்கொள்ளும்படி அழைத்தார்.)*

[2011 மே 27

*கீழ்க்காணும் உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக்கொண்டார்கள்:*

*1. மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி@*

*2. திரு. ஆர். மனோகரன்@*

## 2. பேரவைத் தலைவர் தேர்தல்

**மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர்:** *பேரவையின் இன்றைய அலுவல், அரசமைப்புச் சட்டத்தின் 178-வது பிரிவின்கீழ், பேரவைத் தலைவர் தேர்தல் ஆகும். இப்பதவிக்கான வேட்புத் தாள், சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் சேர்க்கப்பட்டுள்ளது.*

*சட்டமன்றப் பேரவை விதி 7, உள்விதி 4-ன்படி, பேரவைத் தலைவர் பதவிக்கு முறைப்படி மொழியப்பெற்றவர், முன்மொழிந்தவர், அதை வழிமொழிந்தவர் ஆகியோரின் பெயர்களை நான் முதலில் இப்பேரவைக்கு அறிவிக்கவேண்டும். அவர்களின் விவரம்:*

| | | |
|---|---|---|
| *நியமனம் செய்யப்பெற்றவர்* | : | *திரு. டி. ஜெயக்குமார்* |
| *முன்மொழிந்தவர்* | : | *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி)* |
| *வழிமொழிந்தவர்* | : | *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்* |

*பேரவைத் தலைவர் பதவிக்கு திரு. டி. ஜெயக்குமார் அவர்கள் மட்டும் நியமனம் செய்யப்பட்டு, வேட்புத் தாள் பெறப்பட்டுள்ளதால், திரு. டி. ஜெயக்குமார் அவர்கள், இப்பேரவையின் தலைவராக (மேசையைத் தட்டும் ஒலி) ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் இப்பேரவைக்கு அறிவிக்கிறேன். இத்துடன் என்னுடைய அலுவல் முடிவடைந்தது.*

*முற்பகல் 9-35*

*இப்பொழுது பேரவையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் அவர்களுக்கு எனது உளமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

---

*@ ‘கடவுளறிய’ என்று உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.*



2011 மே 27] [தற்காலிகப் பேரவைத் தலைவர்]

*தேர்ந்தெடுக்கப்படுகிற பேரவைத் தலைவரை, பேரவை முன்னவரும், எதிர்க்கட்சித் தலைவரும் அழைத்துச் சென்று, பேரவைத் தலைவரது இருக்கையில் அமரச் செய்வது மரபாகும். எனவே, பேரவைத் தலைவர் அவர்களை, மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்களும், ஆளுங்கட்சியை அடுத்த பிரதான சட்டமன்றக் கட்சியாக இருக்கும் தேசிய முற்போக்கு திராவிடக் கழக கட்சித் தலைவர் திரு. விஜயகாந்த் அவர்களும் அழைத்து வந்து, பேரவைத் தலைவர் இருக்கையில் அமரச் செய்யும்படி கேட்டுக்கொள்கிறேன்.*

*பேரவைத் தலைவர் அவர்கள், இருக்கையில் அமருவதற்குச் செல்லும் நேரத்தில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, பேரவைத் தலைவர் அவர்கள், அவரின் இருக்கையில் அமர்ந்த பின்னரே அமர்தல் வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.*

*(பேரவைத் தலைவர் அவர்களை, பேரவை முன்னவர் மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்களும், பிரதான எதிர்க்கட்சியின் தலைவர் திரு. விஜயகாந்த் அவர்களும் அழைத்து வந்து அவர்களது இருக்கையில் அமரச் செய்தார்கள்) (மேசையைத் தட்டும் ஒலி)*

## 3. பேரவைத் துணைத் தலைவர் தேர்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அறம் நாட்ட வந்தவரே! ஆணவம்சேர் மாற்றார்க்கு அறம் நாட்ட வந்த மாதரசே! (மேசையைத் தட்டும் ஒலி) கோடித் தொண்டர் படையை வழிநடத்தும் வீரத் திருமகளே! (மேசையைத் தட்டும் ஒலி) சமுத்திரத்தின் கரையோரம் பிறந்த சாமானியன் ஆகிய என்னை, சரித்திரப் புகழ்மிக்க சபை நடுவில் ஆசனம் தந்து, அமர வைத்து, நடுநிலை காத்திட ஆணையிட்ட எங்கள் அன்னையே! (மேசையைத் தட்டும் ஒலி) கடலில் நீர் உள்ளவரை, என் உடலில் உயிர் உள்ளவரை, நன்றி உரைத்துக்கொண்டே நான் இருப்பேன் தாயே! நன்றியோடு தலை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

*பேரவையின் அடுத்த அலுவல், பேரவைத் துணைத் தலைவர் தேர்தல் ஆகும். பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கான வேட்புத் தாள் ஏற்கெனவே பெறப்பட்டுள்ளது. பேரவை விதி 8, உள்விதி*

[பேரவைத் தலைவர்] [2011 மே 27

*2—ன்படி, பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கு முறைப்படி மொழியப்பெற்றவர், முன்மொழிந்தவர், அதை வழிமொழிந்தவர் ஆகியோரின் பெயர்களை நான் முதலில் இப்பேரவைக்கு அறிவிக்க வேண்டும். அவர்களின் விவரம்:*

| | |
|---|---|
| நியமனம் செய்யப்பெற்றவர் | : திரு. ப. தனபால் |
| முன்மொழிந்தவர் | : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) |
| வழிமொழிந்தவர் | : மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் |

பேரவைத் துணைத் தலைவர் பதவிக்கு திரு. ப. தனபால் அவர்கள் மட்டும் நியமனம் செய்யப்பட்டு, வேட்புத் தாள் பெறப்பட்டுள்ளதால், திரு. ப. தனபால் அவர்கள், இப்பேரவையின் துணைத் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார் என்பதை மிக்க மகிழ்ச்சியோடு இப்பேரவைக்கு அறிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மிகுந்த அனுபவம் கொண்டவர், அமைதியானவர், என் சகோதரர் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு எனது பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 4. பேரவைத் தலைவருக்கும், துணைத் தலைவருக்கும் பாராட்டுரைகளும், நன்றியுரைகளும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைத் தலைவர் மற்றும் துணைத் தலைவர் ஆகியோருக்குப் பாராட்டுரை வழங்குதல். முதலில் மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எளிய தொண்டனாகிய என்னை மூன்றாவது முறை சட்டமன்ற உறுப்பினராக்கி, நிதி அமைச்சராக்கி, அவை முன்னவர் என்ற ஒரு மாபெரும் பொறுப்பினை வழங்கி, தங்களை அழைத்துச் சென்று பேரவைத் தலைவருக்கான இருக்கையில் அமர வைக்கும் வாய்ப்பினை வழங்கிய, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர், (மேசையைத் தட்டும் ஒலி) தரணி போற்றும் ஒப்பற்ற தலைவி, அகிலம் போற்றும் உத்தமத் தலைவி, சமூக நீதி காத்த வீராங்கனை, தங்கத் தாரகை, (மேசையைத் தட்டும் ஒலி)



2011 மே 27] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

எங்கள் குடும்ப விளக்கு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது பணிவான வணக்கத்தினையும், என்றும் மாறா நன்றியினையும் முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தப் பேரவைக்கு என்னை அனுப்பி வைத்த போடிநாயக்கனூர் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 9-40*

வரலாற்றுச் சிறப்பும், பாரம்பரியமும் மிக்க இந்த அவையில் இன்றையதினம் பேரவைத் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தங்களையும், பேரவைத் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாண்புமிகு திரு. ப. தனபால் அவர்களையும், பாராட்டுகின்ற நல்வாய்ப்பினைப் பெற்றமைக்கு மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

"இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்"

என்ற வள்ளுவரின் வாக்கிற்கு இணங்க எதையும் தீர்க்கமாகச் சிந்தித்து முடிவெடுக்கக்கூடிய நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) தங்கள் இருவரையும் தேர்ந்தெடுத்து இந்த இருக்கையிலே அமரச் செய்துள்ளது என்பது சாலப் பொருத்தமானது.

பாராளுமன்ற ஜனநாயகத்தைப் பாதுகாப்பதில் நம்முடைய தமிழகச் சட்டமன்றப் பேரவைக்கு நீண்ட, நெடிய பாரம்பரியம் உண்டு. சட்டமன்றம் என்பது மக்களுக்காக, மக்களுடைய குறைபாடுகளை எடுத்துச்சொல்லி அவர்களுடைய உரிமைகளைப் பாதுகாக்கக்கூடிய மன்றமாக, அவர்களுக்கு ஆட்சிப் பீடமாக அமைக்கப்பட்டதாகும். இந்தப் பேரவையின் தலைவர்களாக இருந்து மிகச் சிறப்பான முறையில் சட்டமன்றப் பேரவையினுடைய ஜனநாயகத்தை மதித்து பெருமை சேர்த்த பெருமைக்குரிய பல தலைவர்கள் உட்கார்ந்து, அலங்கரித்த இந்த இருக்கையிலே தாங்கள் அமர்ந்திருப்பது உள்ளபடியே பெருமகிழ்ச்சிக்குரியது.

ஒரு மாமன்றத் தலைவருக்கு என்னென்ன தகுதிகள் தேவையோ, அந்தத் தகுதிகள் அனைத்தையும் தாங்கள் முழுமையாகப் பெற்றுள்ளீர்கள் என்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் உட்பட

அனைவரும் நம்பக்கூடிய அளவுக்கு தங்களது நடவடிக்கைகள் சிறப்பாக அமையப் போகின்றன என்பதில் எங்களுக்கு முழுமையான நம்பிக்கை உள்ளது. குறிப்பாக ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி என்ற பேதமின்றி எல்லோரையும் அரவணைத்துச் செல்கின்ற பண்புதான் இம்மன்றத் தலைவருக்கு நிச்சயம் இருக்க வேண்டும். இயற்கையிலேயே அப்பண்புடைய தாங்கள் சிறப்பாகப் பணியாற்றுவீர்கள் என்பதை நாங்கள் அனைவரும் அறிவோம். தாங்கள் அனைவருடனும் இனிமையாகப் பழகக்கூடிய பண்புடையவர்கள் என்பதும் அனைவரும் அறிந்ததே.

இதுநாள் வரை இந்த அவையில் இருந்த பேரவைத் தலைவர்களைவிட, ஏன் பிற மாநிலங்களில் இருந்த பேரவைத் தலைவர்களைவிட தலைசிறந்த பேரவைத் தலைவர் என்ற பெருமையைப் பெறுகின்ற அளவுக்குத் தாங்கள் பணியாற்றி, தமிழ்நாட்டிற்கும், தமிழ்ச் சமுதாயத்திற்கும், நம்மை இந்த அளவிற்கு உயர்த்திய மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் *(மேசையைத் தட்டும் ஒலி)* தாங்கள் பெருமை சேர்க்க வேண்டும் என்ற என்னுடைய விருப்பத்தை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அவைக்கென்று உள்ள ஜனநாயக மரபுகளையும், விதிமுறைகளையும், கண்ணியத்தையும் கட்டிக் காத்து, அவற்றை மீறாமல் பேரவையைச் செம்மையாக நடத்த வேண்டிய மிகப் பெரிய கடமையும், பொறுப்பும் தங்களுக்கு வந்துள்ளது. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பேராதரவு *(மேசையைத் தட்டும் ஒலி)* தங்களுக்கு இருப்பதால், தாங்கள் தங்கள் பணியையும், பொறுப்பினையும் சிறப்பாகவும், எளிதாகவும் நிறைவேற்ற முடியும் என்பதில் எனக்கு ஐயம் இல்லை.

“நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும், நடப்பவை நல்லவையாக இருக்கட்டும்” என்ற நோக்கத்தோடு மக்கள் சேவை புரியவே நாம் அனைவரும் இங்கு வந்துள்ளோம் என்பதை நினைவில் கொண்டு, இங்கு வந்துள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் பணியாற்றினால், அது இந்த அவை தன்னுடைய பணிகளைச் சிறப்பாக நடத்தி முடிப்பதற்கு ஏதுவாக அமையும் என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு, இந்த அவை சிறப்பாக நடைபெறுவதற்குத் தங்களுக்கு அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் முழுமையாக ஒத்துழைப்பார்கள் என்ற நம்பிக்கையைத் தெரிவிக்கும்



அதே வேளையில், மன்றத் தலைவர் அவையை எளிதாக நடத்திச் செல்ல ஏதுவாக, அனைவரும் மரபுகளைக் கடைப்பிடித்து ஒத்துழைக்க வேண்டுமென அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இன்று இங்கு ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நம்முடைய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர், அருமை நண்பர் திரு. ப. தனபால் அவர்களும் இந்த அவையைச் செம்மையான முறையில் நடத்திச் செல்வதற்கான எல்லாவித தகுதியையும், திறமையையும், அனுபவத்தினையும், ஆற்றலையும் பெற்றிருக்கிறார்கள். அவர் தங்களுக்கு உதவுகிற உற்ற நண்பராக, தாங்கள் அவையை நடத்திச் செல்லும் அதே பாங்கில் உங்களுக்கு ஒத்துழைத்து, சிறப்பாக அவையை நடத்துவார் என்பதில் எங்களுக்கு மிகுந்த நம்பிக்கையுண்டு.

பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தங்களுக்கும், மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களுக்கும் இந்த அவையைச் செம்மையான முறையில் நடத்திச் செல்வதற்கான எல்லா தகுதியும், திறமையும், அறிவுத் திறனும், ஆற்றல் திறனும் ஒருங்கே அமையப்பெற்றுள்ளது என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை.

தங்களது பணியும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரது பணியும் சிறக்க, மேன்மை பெற, எனது இதயபூர்வமான வாழ்த்துகளை மாண்புமிகு அம்மா அவர்களது நல்லாசியுடன் தெரிவித்துக்கொண்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

*முற்பகல் 9-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விஜயகாந்த் அவர்கள்.

**திரு. விஜயகாந்த்:** மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவராகத் தாங்கள் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு, தே.மு.தி.க. சார்பிலும், எனது சார்பிலும் இதயமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* எந்தப் போட்டியும் இல்லாமல் தாங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதிலிருந்தே, தாங்கள் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படக் கூடியவர் என்பதும், எல்லோருக்கும்

பொதுவானவர் என்பதும் நன்கு விளங்கும். தாங்கள் பட்டப் படிப்பு படித்தவர் மட்டுமல்ல; சட்டக் கல்லூரியில் பி.எல். படித்துள்ளீர்கள். ஆகவே, சட்ட நுணுக்கங்களைத் தாங்கள் நன்கு அறிந்துள்ளபடியால், சட்டசபையை விதிமுறைகளின்படி நடத்துவீர்கள் என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. ஏற்கெனவே அமைச்சராக இருந்த அனுபவமும், சட்டமன்றத்திலே எதிர்க்கட்சி உறுப்பினராக இருந்து பணியாற்றிய அனுபவமும் தங்களுக்கு இருப்பதால், எங்களைப் போன்ற எதிர்க்கட்சியினருக்குத் தாங்கள் உதவிகரமாக இருப்பீர்கள் என்று நம்புகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* எதிர்க்கட்சியைச் சேர்ந்த நாங்கள் எடுத்துச் சொல்லும் கருத்துகள் ஆளுங்கட்சிக்குத் தேவைப்படலாம். எனவே, நாங்கள் எடுத்துச் சொல்லும் கருத்துகளை ஏற்று, எங்களுக்குத் தாராளமாக வாய்ப்புகளை வழங்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

எவ்வாறு கடந்த காலங்களில் கண்ணியமும், பண்பாடும் மிக்க சட்டசபையாக விளங்கியதோ, அதைக் காப்பாற்றும் வகையில், இந்த அவையைத் தாங்கள் நடத்திச் செல்ல தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தின் உறுப்பினர்களாகிய நாங்கள் அனைவரும் தங்களுக்கு முழு ஒத்துழைப்புத் தருவோம் என்று தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)* தமிழ்நாடு சட்டமன்றம் ஜனநாயகத்திற்கு இலக்கணமாகத் திகழும் வகையில், தாங்கள் பணியாற்றுவதற்கு மீண்டும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மூன்றாவது முறையாகத் தமிழக முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச் செயலாளர் அவர்களுக்கும் எனது சார்பிலும், எங்கள் தேசிய முற்போக்கு திராவிடக் கழகத்தின் சார்பிலும் வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு சட்டமன்றத் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள துணைத் தலைவருக்கு என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஏற்கெனவே, அமைச்சராகவும், சட்டமன்ற உறுப்பினராகவும் இருந்து நல்ல அனுபவத்தைப் பெற்றவர், ஒடுக்கப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர் என்ற முறையிலும், உழைக்கும் மக்களின் கஷ்டங்களை நன்கு



உணர்ந்தவர், ஏழையெளிய மக்களுக்குப் பாடுபடும் இயக்கத்தைச் சார்ந்தவர் என்ற முறையிலும், அவர்களின் நம்பிக்கையைப் பெற்றவர் என்ற வகையிலும், துணைத் தலைவராகத் தங்களது பணி சிறக்க எனது இதயமார்ந்த நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 14-வது சட்டப் பேரவையினுடைய தலைவராக ஏகமனதாக நீங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டமைக்காக, அதேபோல், துணைத் தலைவராக மாண்புமிகு திரு. ப. தனபால் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டமைக்காக என்னுடைய வாழ்த்துகளை, வரவேற்பைத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் தெரிவிப்பதிலே மகிழ்ச்சியடைகிறேன்; பெருமைப்படுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் ஆளுங்கட்சியினுடைய வரிசையில் இருந்து பணியாற்றியிருக்கிறீர்கள்; அதேபோல், எதிர்க்கட்சியினுடைய வரிசையில் இருந்தும் பணியாற்றியிருக்கிறீர்கள். அதுமட்டுமல்ல; இரண்டு முறை அமைச்சராகவும் இருந்து உங்கள் கடமையை நிறைவேற்றியிருக்கிறீர்கள். எனவே, இதையெல்லாம் ஒட்டுமொத்தமாகக் கூட்டிப் பார்க்கிற நேரத்தில், சிறந்த அனுபவத்தைப் பெற்றிருக்கக்கூடிய ஒருவராக நீங்கள் விளங்கிக் கொண்டிருக்கிறீர்கள். சட்டம் படித்து, சட்ட நுணுக்கங்களை அறிந்திருக்கக்கூடிய வகையிலே, ஆளுங்கட்சியினுடைய நோக்கத்தையும், அதே நேரத்தில் எதிர்க்கட்சியினுடைய உணர்வுகளையும் நிச்சயமாகப் புரிந்து, சட்டமன்றத்தை நடத்துவீர்கள் என்ற நம்பிக்கை எங்களைப் போன்ற எதிர்க்கட்சியிலே உள்ளவர்களுக்கெல்லாம் நிரம்ப உண்டு.

சட்டமன்ற ஜனநாயகத்தைப் பற்றி பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் ஒரு முறை குறிப்பிட்ட நேரத்தில், நம்முடைய கையிலே ஐந்து விரல்கள் இருக்கின்றன. நாம் நினைக்கிற நேரத்தில் அவற்றை நன்றாகச் சேர்த்துவிட முடிகிறது. கட்டை விரல், ஆள்காட்டி விரல், நடு விரல், மோதிர விரல், சுண்டு விரல்

என்று இந்த விரல்கள் ஐந்தாகப் பிரிந்திருக்கின்றன. ஐந்து விரல்கள் தனியாக இருந்தாலும், அவை ஒன்று சேர்கிறபோது நாம் உருப்படியாக ஒரு காரியத்தை நிச்சயமாக நிறைவேற்ற முடிகிறது. எப்படி விரல்கள் தனியாக இருக்கின்றனவோ, அதேபோல, ஜனநாயகத்தில் இன்றைக்குப் பல கட்சிகள் அமைந்திருப்பது உள்ளபடியே மகிழ்ச்சிக்குரிய ஒன்று.

*முற்பகல் 9-50*

"உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள்பெருந்தேர்க்கு
அச்சாணி அன்னார் உடைத்து"

என்ற வள்ளுவருடைய வாக்கின் அடிப்படையிலே, பெரிய தேர் ஓடுவதற்குக் காரணமான அச்சாணி சிறியதுதான். நாங்கள் பெற்றிருக்கும் எண்ணிக்கையை மட்டும் பார்க்காமல், நாங்கள் எடுத்துவைக்கக்கூடிய உணர்வுகளுக்கும் மதிப்பளித்து வழி நடத்துவீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கெல்லாம் நிரம்ப உண்டு. வரலாற்றுச் சிறப்புக்குரிய இந்தச் சட்டப் பேரவையை பொறுத்தவரையிலே ஒரு நீண்ட நெடிய பாரம்பரியத்தைப் பெற்றிருக்கக்கூடிய மன்றமாக இந்த மன்றம் விளங்கிக் கொண்டிருக்கிறது. அதிலே குறிப்பாக, இந்த அவையிலே அவைத் தலைவராக இருந்து அலங்கரித்திருக்கக்கூடிய, வரலாற்றில் இடம் பெற்றிருக்கக்கூடிய எத்தனையோ தலைவர்கள் உண்டு என்பதை நாம் மறந்துவிட முடியாது. உதாரணமாக, டாக்டர் யு. கிருஷ்ணாராவ், மதிப்பிற்குரிய புலவர் கோவிந்தன், மரியாதைக்குரிய திரு. சி.பா. ஆதித்தனார், பண்பாளர் திரு. பி.டி.ஆர். பழனிவேல் ராஜன் போன்ற பலர் இந்த இருக்கையிலே அமர்ந்து அலங்கரித்திருக்கிறார்கள். ஆக, அந்த வரலாற்றிலே இடம் பெறக்கூடிய அளவிற்கு இன்றைக்கு நீங்கள் இந்த இருக்கையிலே அமர்ந்திருப்பது உள்ளபடியே பாராட்டுக்குரிய ஒன்று.

'ஊர் கூடி தேர் இழுப்பது' என்பார்களே அதேபோல் ஜனநாயகத் தேரை இழுக்க எங்களைப்போன்ற எதிர்க்கட்சிகளினுடைய உறுப்பினர்களுடைய ஒத்துழைப்பு நிச்சயமாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்தில் உறுதியோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த அவையைச் சிறப்போடு நடத்திட உங்களுக்கு எல்லா வகையிலும் ஒத்துழைப்புத் தருவதற்கு



நாங்கள் தயாராக இருக்கிறோம் என்ற அந்த உறுதியை மீண்டும் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கக்கூடிய உங்களையும், துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கக்கூடிய மாண்புமிகு திரு. தனபால் அவர்களையும் மீண்டும் ஒரு முறை நான் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் வரவேற்று வாழ்த்துகிறேன். அதேபோல், புதிதாகப் பொறுப்பேற்றுள்ள அரசையும் வாழ்த்தி, பாராட்டி அமைகிறேன். வணக்கம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.*

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்த அவைக்குப் புதியவன். முதன் முறையாகப் பேசுகிறேன். என்னுடைய முதல் பேச்சிலேயே, 35 ஆண்டுகளாக எனது இனிய நண்பராக, அரசியல் களத்தில், தனிப்பட்ட முறையில் கனிவும், பண்பும் மிகுந்தவராக, போற்றத்தக்கவராகத் திகழ்ந்த என்னுடைய நண்பரைப் பாராட்டுகிற, வாழ்த்துகிற வாய்ப்பாக அமைந்ததற்கு நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன்.

கடந்த 5 ஆண்டுகளின்போது இந்த மன்றத்திற்கு வெளியே ஒரு சட்டமன்றக் கூட்டம் நடந்து, அதற்குப் பேரவைத் தலைவராக இப்போதைய பேரவைத் தலைவர் இருந்ததாக நான் பத்திரிகையிலே செய்தி பார்த்தேன். அந்தப் பேரவைத் தலைவர் இப்போது நிஜமான பேரவைத் தலைவராக *(மேசையைத் தட்டும் ஒலி)* இங்கே அமர்ந்திருக்கிறார்; அவரே நினைத்தாரோ இல்லையோ எனக்குத் தெரியாது. எனக்கு அதிலே இரட்டிப்பு மகிழ்ச்சி. இந்தப் பேரவையில் மிகுந்த பலத்தோடு, கடுமையான போட்டிக்கு மத்தியிலே வெற்றி பெற்று அமைந்திருக்கிற இந்த ஆட்சியிடம் மக்கள் மிகப்பெரும் எதிர்பார்ப்புகளோடு காத்திருக்கிறார்கள். இந்த அவையிலே நடைபெறுகிற எல்லா விவாதங்களிலும், எங்களுடைய கருத்துகள் என்பது எதிர்பார்ப்புகளை எடுத்துவைப்பதாக, அந்த எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கு வேகம் தேவை என்று கருதினால், வேகம் தேவை என்று சுட்டிக்காட்டுவதாக, நிரம்ப வேகத்தோடு

நடைபெறுகிறது என்றால், வேகத்தோடு நடைபெறுகிறது என்று அந்த நிறையைப் பாராட்டுவதாக, குறை என்று எங்கள் மனதில் பட்டால் இது போக்கப்பட வேண்டுமென்று எடுத்துச்சொல்வதாக இருக்கும் நிறை என்று எங்களுக்குப் பட்டால் பாராட்டும் வகையிலே எங்களுடைய அணுகுமுறை நிச்சயமாக இருக்கும். ஆக்கபூர்வமாக நாங்கள் செயல்படுவோம் என்று ஏற்கெனவே அறிவித்தபடி எங்களுடைய முயற்சிகள் அனைத்தும் இருக்கும்.

முற்பகல் 9-55

அப்படி நாங்கள் எடுத்து வைக்கக்கூடிய அந்தக் கருத்துகளுக்கு வாய்ப்பளிக்க வேண்டும். பேரவைத் தலைவருக்கு என்னென்ன நிபந்தனைகள் இருக்கின்றன என்று எனக்குத் தெரியும். அவர்களுக்கும் நிறைய கட்டுப்பாடுகள் இருக்கின்றன என்று எனக்குத் தெரியும். ஏனென்றால் ஜனநாயகத்தில் we agree to disagree. நாம் ஏற்க விரும்பாத கருத்தைக்கூட எடுத்துவைக்க வாய்ப்பளிப்பது என்பதுதான் ஜனநாயகம் என்பதற்கு ஏற்ப, குறை சொல்லுகிற நேரத்தில், குறை சொல்ல நாங்கள் கட்டாயப்படுத்தப்பட்டு, அப்படிக் குறை சொல்லுகிற அந்தத் தருணத்தில்--இப்போதைய பேரவைத் தலைவர் எந்தக் கஞ்சத்தனமும் இல்லாதவர் என்று எனக்குத் தெரியும்--நேர விஷயத்திலும் கொஞ்சம் கஞ்சத்தனம் இல்லாமல் இருக்கவேண்டும் என்று நான் அவரைக் கேட்டுக்கொள்கிறேன். அறிஞர் ஐன்ஸ்டீன் அவர்கள் ஒரு முறை குறிப்பிட்டார்; முக்கியமான விஷயம் என்னவென்றால், கேள்வி கேட்பதை நிறுத்தவேகூடாது என்றார். கேள்வி கேட்பதை நாங்கள் நிறுத்தாமல் இருப்பதிலே ஆச்சரியம் இல்லை. பேரவைத் தலைவரும் நிறுத்தாமல் எங்களுக்குச் சற்று உதவ வேண்டும் என்று நான் அவரைக் கேட்டுக்கொள்கிறேன்.

1937-லேயிருந்து இந்த அவை கண்ணியத்தோடு செயல்பட்டு, இந்த அவைக்கு ஏராளமான புகழ் சேர்க்கப்பட்டிருக்கின்றது. அப்படிப்பட்ட அந்தப் புகழ் மட்டும் தொடரக்கூடிய வகையிலே, இந்த அவையின் நிகழ்வுகள் அமைய, அவையின் நிகழ்ச்சிகள் அனைத்தும் சுவையாகவே இருக்க, எங்களுடைய ஒத்துழைப்பு எப்போதும் இருக்கும். அந்த அளவிலே மாண்புமிகு பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற எனது அருமை நண்பரை



நான் பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன். மாண்புமிகு துணைத் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற பேரவைத் துணைத் தலைவர் அவர்களையும் நான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே பாராட்டுகிறேன், வாழ்த்துகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மரியாதைக்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ் மாநிலக் குழுவின் சார்பாக என்னை இரண்டாவது முறையாக இந்த அவையிலே சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்திருப்பதற்கு இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ் மாநிலக் குழுவிற்கு நான் முதலில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். வால்பாறை சட்டமன்றப் பேரவைத் தொகுதியிலே போட்டியிட்டு, கொடூரமான மிருகங்களுக்கு மத்தியிலிருந்து இந்த அவைக்கு வந்திருப்பதை எண்ணி நான் மகிழ்கிறேன். என்னை இந்த சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுத்த வால்பாறை சட்டமன்றப் பேரவைத் தொகுதி மக்களுக்கு மீண்டும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் தலைவர் அவர்கள், ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கக்கூடிய மாண்புமிகு சட்டமன்றப் பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் ஆகிய இருவருக்கும் இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ் மாநிலக் குழுவின் சார்பாக, இந்திய கம்யூனிஸ்டு கட்சியினுடைய சட்டமன்றக் கட்சியின் சார்பாக முதலில் நெஞ்சம் நிறைந்த பாராட்டுதல்களையும், வாழ்த்துகளையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டமன்றத்தினுடைய பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கக்கூடிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் சட்டம் படித்தவர்கள், பல முறை சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றியவர்கள், அமைச்சராகத் தமிழகத்திலே பவனி வந்தவர்கள். அநேகமாக தமிழகத்தினுடைய மக்களின் உணர்வுகளைப் பற்றி, தமிழ்ச் சமுதாயத்தைப் பற்றி நன்கு அறிந்திருப்பவர்கள். வழக்குமன்றத்திலே வழக்காடும்போதுகூட அவர் சார்ந்திருக்கக்கூடிய கட்சிக்காக மட்டுமே வழக்காடிப் பழக்கப்பட்டவர்.

இந்த நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்வது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் பொதுவானவர், நடுநிலையானவர்; அவர் ஒருசார்பாகப் பேசக்கூடாது. எனவே, இந்த அவையிலே அவருடைய தீர்ப்புகள் இருசாராருக்கும் சிறந்த முறையிலே அமையவேண்டுமென்று இந்த நேரத்திலே இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக அன்போடு கேட்டுக்கொள்கிறேன். தமிழகத்தினுடைய மக்களால் இப்போது தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கக்கூடிய மரியாதைக்குரிய தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தலைமையிலே அமைந்துள்ள இந்த ஆட்சியிடமிருந்து தமிழகத்தினுடைய மக்கள் அதிகம் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தொழிலாளி வர்க்கங்கள், இன்னும் இருக்கக்கூடிய விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்கள் எல்லாம் பல விஷயங்களை இந்த அரசாங்கத்திடமிருந்து எதிர்பார்த்துக் கொண்டிருக்கக்கூடிய இந்த நேரத்தில், எங்களைப் போன்று இருக்கக்கூடிய எதிர்க்கட்சிகளுக்கு நீங்கள் முன்னுரிமை அளிக்கவேண்டும், வாய்ப்பு அளிக்க வேண்டும். அப்படிப்பட்ட ஒரு நடைமுறையைப் பின்பற்ற வேண்டும் என்பதை அன்போடு கேட்டுக்கொள்கிறேன். ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கக்கூடிய பேரவைத் தலைவர் அவர்களை நான் வாழ்த்துகிறேன்; இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாகப் பாராட்டுகிறேன். அவர் பணி சிறக்க வாழ்த்துகிறேன்.

துணைத் தலைவராகப் பதவியேற்றிருக்கக்கூடிய மரியாதைக்குரிய பேரவையினுடைய துணைத் தலைவர் திரு. ப. தனபால் அவர்கள், நான் 1980 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது என்னோடு பணியாற்றியவர்; எனக்கு அவரை நன்றாகத் தெரியும். பண்பானவர், அன்போடு பழகக்கூடியவர், சிறந்த தலைமைப் பற்று மிக்கவர். அப்படிப்பட்டவர் நீண்ட, நெடிய காலம் சட்டமன்றப் பேரவை உறுப்பினராகத் தொடர்ச்சியாக வந்து, இப்போது சட்டமன்றத்தினுடைய பேரவைத் துணைத் தலைவராக தேர்வு செய்யப்பட்டிருப்பது, பாராட்டுதலுக்குரியது. தமிழ்ச் சமுதாயத்தில் வாழக்கூடிய தாழ்த்தப்பட்ட மக்களுக்குப் பெருமை சேர்க்கக்கூடிய முறையிலே நம்முடைய பேரவைத் துணைத் தலைவரை



நம்முடைய முதல்வர் அவர்கள் தேர்ந்தெடுத்திருப்பது, இந்தத் தமிழகத்திற்கு மட்டுமல்ல, இந்தப் பேரவைக்கும் பெருமை, தமிழ்ச் சமுதாயத்திற்கும் பெருமை. அப்படிப்பட்ட அவர், இந்த நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, இன்னும் இருக்கக்கூடிய ஏழையெளிய மக்களுக்கெல்லாம் தொண்டாற்றக்கூடிய வகையிலே இந்த சட்டமன்றப் பேரவையிலே சிறப்பாகச் செயலாற்ற வேண்டும் என்று சொல்லி, இருவரையும் இந்திய கம்யூனிஸ்டு கட்சியினுடைய மாநிலக் குழுவின் சார்பாகவும், சட்டமன்றக் கட்சியின் சார்பாகவும் அவர்கள் பணி சிறக்க வாழ்த்தி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

*முற்பகல் 10-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. கோபிநாத் அவர்கள்.

**திரு. கே. கோபிநாத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 3-வது முறையாக நான் இந்த மாமன்றத்திலே உறுப்பினராவதற்கு வாய்ப்பு தந்த அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவி அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு. தங்கபாலு அவர்களுக்கும், என்னை இந்த அவைக்கு 3-வது முறையாக அனுப்பி வைத்த ஓசூர் தொகுதி மக்களுக்கும், என்னுடைய வெற்றிக்காக அயராது பாடுபட்ட தோழமைக் கட்சித் தலைவர்களுக்கும், தொண்டர்களுக்கும், அனைவருக்கும் முதலில் என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அவையில் தாங்கள் ஒருமனதாக சட்டமன்றத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட வாய்ப்புக் கொடுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், காங்கிரஸ் கட்சியின் சார்பாக மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் ஏற்கெனவே இந்த அவையிலே அமைச்சராகப் பணியாற்றியவர். அதுமட்டுமல்ல, நீங்கள் நீண்ட அனுபவம் கொண்ட மூத்த உறுப்பினர். நேற்றுவரை ஒரு கட்சியைச் சேர்ந்த உறுப்பினர். ஆனால், இன்றைக்கு ஆளும் கட்சியையும், எதிர்க்கட்சியையும் சமமாக வழிநடத்திச் செல்லக்கூடிய நிலைமை, பொறுப்பு தங்களுக்கு இருக்கிறது. நான் மூன்றாவது முறையாகத்

தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தாலும்கூட என்னைப் பொறுத்தவரை எனக்குத் தமிழ் சரியாக வரவில்லை. அது ஏற்கெனவே உங்களுக்கும் தெரியும். நான் ஏதாவது தவறாகச் சொன்னால், அந்தத் தவறை நீங்கள் பெரிதாக எடுத்துக்கொள்ளாமல் அந்தத் தவறையே சுட்டிக்காட்டி எனக்கு வாய்ப்புக் கொடுக்காமல் இருக்காமல், எனக்கு நீங்கள் வாய்ப்புக் கொடுப்பீர்கள் என்ற நம்பிக்கை இருக்கிறது.

இந்தப் பொறுப்பினை தாங்கள் எடுத்ததற்கு, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் தலைவி அன்னை சோனியா காந்தி அவர்களின் சார்பிலும், தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் திரு. தங்கபாலு அவர்கள் சார்பிலும், சட்டமன்ற காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர்கள் சார்பிலும், என் சார்பிலும் மனமார்ந்த பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. குரு என்கிற குருநாதன் அவர்கள்.

**திரு. ஜெ. குரு என்கிற குருநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். இந்தப் பேரவைக்கு என்னைத் தேர்ந்தெடுத்த ஜெயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதி மக்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, எனக்கு இந்த வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்த எங்கள் இனமான காவலர் மருத்துவர் அய்யா அவர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, இந்தப் பேரவையில் 4 முறை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட நீங்கள் அமைச்சராகவும் செயல்பட்டு இருக்கின்றீர்கள். அந்த வகையிலே இங்கே இருக்கின்ற அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களையும் அரவணைத்து, சிறப்பாக இந்தப் பேரவையை செயல்படுத்துவீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு. அந்த வகையில் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பேரவைத் தலைவர் அவர்களுக்கு, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக எங்களுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொண்டு, துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றவருக்கும் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

***முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அளவற்ற அருளாளனும், நிகரற்ற அன்புடையவனுமாகிய ஏக இறைவனுக்கு வணக்கம் தெரிவித்து, இந்த அவையில் உள்ள அனைவர் மீதும் அந்த ஏக இறைவனின் பேரருள் பொழியப்பட பிரார்த்தித்து, பேரவைத் தலைவராக நீங்களும், துணைத் தலைவராக மாண்புமிகு திரு. ப. தனபால் அவர்களும் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்காக முதலிலே உங்களுக்கு மனிதநேய மக்கள் கட்சியின் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். வரலாற்றுச் சிறப்பு மிகுந்த புனித ஜார்ஜ் கோட்டையிலே அமைந்துள்ள இந்த சட்டமன்றப் பேரவை மன்றத்தில் சட்டமன்ற உறுப்பினர்களாக நாம் அமர்வதற்கும், நீங்கள் இந்த 14-வது சட்டமன்றப் பேரவையின் தலைவராக, 1922 ஆம் ஆண்டு வெலிங்டன் பிரபுவும், அவருடைய துணைவியாரும், இந்த அவைக்குப் பரிசாக அளித்த சிறப்பு மிகுந்த, தொன்மையான சிம்மாசனத்தில் அமர்வதற்கும், வழிவகுத்த மாண்புமிகு தமிழக முதல்வர் எங்கள் அன்புச் சகோதரி அவர்களுக்கு மனிதநேய மக்கள் சட்சியின் சார்பாக எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-05*

சிறுபான்மை மக்களால் தொடங்கப்பட்டு, தூய்மையான அரசியல் நெறிமுறைகளைப் பின்பற்றுவதை உயிர் மூச்சாகக் கொண்டு இயங்கும் மனிதநேய மக்கள் கட்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து, தொடங்கப்பட்ட இரண்டு ஆண்டுக்குள்ளாகவே சட்டமன்றத்தில் இரண்டு இடங்கள் பெறுவதற்கு உறுதுணையாக இருந்த அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், எங்கள் கூட்டணியின் அனைத்துத் தலைவர்களுக்கும், தொண்டர்களுக்கும் என் இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்மீது அளப்பரிய அன்பைப் பொழிந்து, என்னைத் தங்கள் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்த இராமநாதபுரம் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா] [2011 மே 27

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு, பிற்படுத்தப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களின்மீது மிகுந்த கரிசனம் கொண்ட அரசு என்பதை அதன் தொடக்கமே பறைசாற்றிக் கொண்டிருக்கிறது. இந்த 14-வது சட்டமன்றப் பேரவையின் தற்காலிகப் பேரவைத் தலைவராக ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சார்ந்த மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்களை நியமித்து, இப்போது பிற்படுத்தப்பட்ட சமூகத்தைச் சார்ந்த தங்களை, இந்தப் பேரவையின் தலைவராகவும், ஒடுக்கப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மரியாதைக்குரிய திரு. ப. தனபால் அவர்களை, பேரவையின் துணைத் தலைவராகவும் நியமித்து உண்மையான சமூக நீதியை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நிலைநாட்டியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக அவர்களுக்கு மீண்டும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சபாநாயகர் எப்படிப்பட்டவர் என்பது குறித்து நமது நாட்டின் முதல் பிரதமர் பண்டித ஜவஹர்லால் நேரு அவர்கள் தொடக்கத்திலேயே குறிப்பிடும்போது சொன்னார், “The Speaker represents the House; he represents the dignity of the House; the freedom of the House and because the House represents the nation in a particular way, the Speaker becomes the symbol of the nation’s freedom and liberty. Therefore, that should be an honoured position, a free position and should be occupied always by persons of outstanding ability and impartiality” என்றார். ஒட்டுமொத்தப் பேரவையின் பிரதிநிதியாக சபாநாயகர் விளங்குகிறார். பேரவையின் கண்ணியத்தையும் பிரதிபலிப்பவராக, அதன் சுதந்திரத்தின் அடையாளமாக அவர் திகழ்கிறார். பேரவை ஒரு குறிப்பிட்ட வகையில் நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்துவதால், நாட்டில் நிலவும் சுதந்திரத்தின் சின்னமாகவும் சபாநாயகர் விளங்குகிறார். எனவே, சபாநாயகர் பதவி என்பது கண்ணியத்திற்குரியது, சுதந்திரமானது, ஆற்றல் மிகுந்த, பாரபட்சமில்லாதவர்களால் மட்டுமே அந்தப் பதவி நிரப்பப்பட வேண்டுமென்றார் பண்டித ஜவஹர்லால் நேரு. பண்டித நேரு அவர்கள் குறிப்பிட்ட தகுதிகள் அனைத்தையும் ஒருசேரப் பெற்றுள்ள தங்கள் தலைமையின்கீழ் எனது சட்டமன்றப் பணியைத் தொடங்குவதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். முறுவல் நிறைந்த முகத்திற்குச் சொந்தக்காரரான நீங்கள், உங்கள் மலர்ந்த முகத்தினால் இந்த அவையில் தென்றல் எந்நேரமும் வீசுவதற்கு வழிவகுப்பீர்கள் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு. உங்கள் அனுபவம், பொறுமை, நேர்மையினால் இந்தப் பேரவையின் கம்பீரமும், கௌரவமும் மேலும் உயரும் வகையில் நீங்கள் செயல்படுவீர்கள் என்று நம்புகிறேன்.



2011 மே 27] [முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா]

இதே வகையில் ஆற்றல் மிக்க பேரவைத் துணைத் தலைவர் அவர்களும் தனது அனுபவம் மற்றும் மதிநுட்பத்தால் இந்த அவையைத் திறம்பட நடத்தி, இந்த அவைக்கு சிறப்பு சேர்ப்பார் என்ற நம்பிக்கை எங்களுக்கு உண்டு. நீண்ட இடைவெளிக்குப் பிறகு, சிறுபான்மை முஸ்லீம்கள் தலைமை தாங்கும் ஒரு கட்சிக்கு, தேர்தலிலே தனிச் சின்னத்தில் போட்டியிட்டு இந்த அவையில் இரண்டு உறுப்பினர்கள் இடம் பெறும் வாய்ப்புக் கிடைத்துள்ளது. தமிழக மக்களின் உறவுகளை பலமாக எதிரொலிக்க எங்களுக்கு நல்ல வாய்ப்புகளை நீங்கள் வழங்குவீர்கள் என்ற நம்பிக்கையும் எங்களுக்கு உண்டு. உங்கள் இருவர் பணியும், இந்த அரசின் பணியும் சிறப்பாக அமைய இறைவனைப் பிரார்த்தித்து உங்கள் அனைவருக்கும் என் நல்வாழ்த்துகளை மனிதநேய மக்கள் கட்சியின் சார்பாகத் தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“ஈன்ற பொழுதின் பெரிதுஉவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்”

என்ற குறளுக்கு இலக்கணமாக, 14-வது சட்டமன்றத்தினுடைய பேரவைத் தலைவராக ஏகமனதாகத் தேர்தெடுக்கப்பட்டிருக்கின்ற மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், துணைத் தலைவர் திரு. ப. தனபால் அவர்களுக்கும் புதிய தமிழகம் கட்சியின் சார்பாகவும், என் சார்பாகவும் நெஞ்சார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[டாக்டர் க. கிருஷ்ணசாமி] [2011 மே 27

*முற்பகல் 10-10*

கடந்த ஐந்து ஆண்டுகளாகத் தமிழகத்தில் நடைபெற்று வந்த குடும்ப ஆட்சி, (குறுக்கீடு) பண பலம் ஆகியவற்றை எதிர்கொண்டு தமிழக மக்களை விடுதலை செய்து மூன்றாவது முறையாகத் தமிழகத்திலே (மேசையைத் தட்டும் ஒலி) ஆட்சிப் பொறுப்பேற்றிருக்கின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இரண்டாவது முறையாக என்னை இந்தச் சட்டமன்றத்திற்கு அனுப்பி இருக்கின்ற ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், தமிழகத்திற்கு ஒரு விடிவுகாலத்தை உருவாக்கும் பொருட்டு அ.இ.அ.தி.மு.க. கூட்டணிக்கு தலைமை தாங்கிய அம்மா அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்துக் கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கும் என்னுடைய நெஞ்சார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

இந்தப் பேரவையிலே வீற்றிருக்கின்ற தலைவர் அவர்கள், பேரவைத் தலைவர் ஆவதற்குண்டான அனைத்து விதமான தகுதிகளையும் கூடுதலாகப் பெற்றிருக்கக்கூடியவர். எளிய சமுதாயத்தில், மீனவ சமுதாயத்திலே பிறந்து தமிழகத்தினுடைய வரலாற்றில் மட்டுமல்ல, இந்தியாவினுடைய வரலாற்றில் முதல் தொழிற்சங்கத்தை, பொதுவுடைமைத் தொழிற்சங்கத்தை உருவாக்குவதற்குக் காரணமான சிங்காரவேலர் அவர்களுடைய வழியிலே வந்தவர். எனவே, பிறப்பிலேயே பொது உரிமை, பொதுவுடைமைத் தத்துவத்திற்குத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர் அவர்கள். இந்த அவையை எவ்வளவு மேன்மையாக நடத்திச் செல்ல வேண்டுமென்பதில் அவர் தேர்வு பெற்றவர். அமைச்சராக விளங்கி, எதிர்க்கட்சி உறுப்பினராகப் பணியாற்றி, எல்லாவிதமான அனுபவங்களையும் பெற்றிருக்கக்கூடியவர்.

தமிழக மக்கள், குறிப்பாகத் தாழ்த்தப்பட்ட மக்கள், சிறுபான்மை மக்கள், பிற்படுத்தப்பட்ட மக்கள், உழைப்பாளி மக்கள் எண்ணற்றோர் பல்வேறு இன்னல்களுக்கு ஆளாகும்போது அவர்களுடைய கருத்துகளை எல்லாம் இந்த மன்றத்திலே எடுத்து வைக்கின்றபோது, நீங்களும் மனமுவந்து சிறிய கட்சிகள், பெரிய கட்சிகள், எண்ணிக்கை அதிகம், குறைவு என்ற வேறுபாடு இல்லாமல், இன்னும் சொல்லப் போனால் சிறிய கட்சிகளுக்கு



2011 மே 27] [டாக்டர் க. கிருஷ்ணசாமி]

கூடுதலான நேரம் ஒதுக்கி உங்களுடைய அன்பைக் காட்டி நீங்கள் முன்னுதாரணமாக விளங்க வேண்டுமென்று கேட்டு, மீண்டும் புதிய தமிழகம் கட்சியின் சார்பாகத் தங்களையும், துணைத் தலைவரையும் வாழ்த்தி விடைபெறுகின்றேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.வி. கதிரவன் அவர்கள்.

**திரு. பி.வி. கதிரவன்:** பதினான்காவது சட்டமன்றப் பேரவைத் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கின்ற தங்களுக்கும், மாண்புமிகு துணை சபாநாயகர் அவர்களுக்கும், மக்களுடைய நம்பிக்கையோடு தமிழக முதல்வராகப் பொறுப்பேற்றிருக்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) எங்களது அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில் நெஞ்சார வாழ்த்துகளையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக்கொள்கிறோம். சபாநாயகராகப் பொறுப்பேற்றிருக்கின்ற மரியாதைக்குரிய மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார் அவர்கள் சட்டமன்ற உறுப்பினராக, வழக்கறிஞராக, அமைச்சராக, அதிலும் சட்டத் துறை அமைச்சராக இருந்தவர்; உண்மையிலேயே எல்லோரிடமும் அருமையாகப் பழகக்கூடியவர். இன்றையதினம் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அவர்களை இந்த பதினான்காவது சட்டமன்றப் பேரவையினுடைய தலைவராகப் பொருத்தமாகத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் என்பதற்காக எங்களது அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பாக அவர்களைப் பாராட்டுகிறேன்.

நான் முதன்முதலாக சட்டமன்றத் தேர்தலிலே போட்டியிட்டு வெற்றி பெற்று வந்திருக்கிறேன். இது என்னுடைய முதல் பேச்சு. இந்த வாய்ப்பை வழங்கியதற்கும், எங்கள் அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சிக்கு எங்களுடைய பாரம்பரிய தொகுதியான உசிலம்பட்டி தொகுதியையும் கொடுத்து, எங்களுடைய பாரம்பரிய சின்னமான சிங்கச் சின்னத்தையும் கொடுத்து, அதில் வெற்றி பெறச் செய்ததற்கும் புரட்சித் தலைவி அம்மா மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு எங்களது அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் சார்பில் நன்றியைத் தெரிவித்து, நமது பேரவைத் தலைவர் அவர்கள் சமன் செய்து சீர் தூக்கும் கோல் போல் அமைந்து இந்தச் சட்டமன்றத்தில் பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 10-15*

அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சி சார்பாக நான் ஒரே ஓர் உறுப்பினர் இருக்கிறேன். அதிலும் எதிர்க்கட்சி வரிசையில் இருக்கிறேன். உசிலம்பட்டி தொகுதி மக்களுக்கும், தமிழக மக்களுக்கும் பணியாற்றுகின்ற வாய்ப்பை நான் பெற்றிருக்கின்றேன். எனக்கும் தகுந்த வாய்ப்பை அளிக்க வேண்டும். ஒரு சட்டமன்ற உறுப்பினர்தான் இருக்கிறார் என்று சிந்திக்காமல், எனக்கும் அந்த வாய்ப்பை நல்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன். பாரம்பரியம் மிக்க இந்த தமிழக சட்டமன்றத்தில் சிறந்த சபாநாயகராக, அனைவரும் பாராட்டுகின்ற சபாநாயகராக, நீங்கள் திகழ வேண்டுமென்று இந்த நேரத்தில் வாழ்த்தி, எனக்கு சிங்கம் சின்னத்தில் வாக்களித்த உசிலம்பட்டி தொகுதி மக்களுக்கும், எனக்கு இந்த வாய்ப்பை நல்கிய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) மீண்டும் நன்றியைச் சொல்லி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.

**திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுச் சிறப்புமிக்க பதினான்காவது சட்டமன்றப் பேரவைத் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள தங்களுக்கும், துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாண்புமிகு திரு. ப. தனபால் அவர்களுக்கும் என் சார்பிலும், சமத்துவ மக்கள் கட்சி சார்பிலும் வாழ்த்துகளையும், வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தச் சிறப்புமிக்க பேரவையில் மாண்புமிகு பேரவைத் தலைவராகச் செயல்படுவதற்கு நல்ல வாய்ப்பினை வழங்கிய எங்கள் கூட்டணியின் தலைவரும், மக்களால் அமோக வெற்றிபெறச் செய்யப்பட்டு, சிறந்த, உன்னதமான முதலமைச்சர் என பாராட்டுப் பெறவிருக்கிற (மேசையைத் தட்டும் ஒலி) திறமை மிக்க மாண்புமிகு முதலமைச்சருமான புரட்சித் தலைவி அவர்களால் தாங்கள் அடையாளம் காட்டப்பட்டிருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் நான்காவது முறையாக சட்டப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறீர்கள். மாண்புமிகு அமைச்சராகவும்



பதவி வகித்து இருக்கிறீர்கள். சட்டமன்றப் பேரவையைத் திறம்பட நடத்துவதற்கேற்ற ஆற்றலும், அறிவும், திறமையும் உங்களுக்கு உண்டு. சபாநாயகர் பதவியில் அமர்வது என்பது முள்மீது அமர்வது போன்றதாகும். அது பொறுப்புணர்ச்சியுடன், நேர்மையாக, பாரபட்சமின்றி, அனைவரின் விவாதங்களையும் கேட்டு தீர்ப்பு வழங்குகின்ற நாட்டாண்மையாக செயல்படக்கூடிய (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு பொறுப்பாகும். அதை நாம் சுமை தாங்குகின்ற ஒரு பொறுப்பு என்றுதான் சொல்ல முடியும். இங்கு எனக்கு முன்பு பேசியவர்கள், நல்ல ஒரு சுகமான காற்று வீசும் என்று சொன்னார்கள். உண்மையிலேயே அது வீசும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

தங்களைப் போலவே, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மாண்புமிகு திரு. ப. தனபால் அவர்களும் அனுபவம் மிக்கவர்; ஆற்றல் மிக்கவர்; ஐந்தாவது முறையாகச் சட்டப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்; அமைச்சர் பதவியும் வகித்தவர். தங்கள் இருவரின் சிறப்பான நிர்வாகத்தின்மூலம் தற்போது அமைந்திருக்கும் பதினான்காவது சட்டமன்றப் பேரவை, வரலாற்றில் பொறிக்கப்படவேண்டிய அளவுக்கு சாதனை படைத்திடவேண்டும். எத்தனை நாட்கள் சட்டமன்றப் பேரவை நடந்தது என்பதைவிட, எவ்வளவு சிறப்பாக, மக்களுக்காகச் செயல்பட்டது என்பதில் நாம் பெருமைப்படும் அளவுக்கு உங்கள் நேர்மையான, திடமான, தீர்க்கமான வழிநடத்துதல் அமையும் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை என்பதைப் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மன்றத்தில் பேரவைத் தலைவராக, திறமையுடன், நேர்மையுடன் செயல்பட்ட திரு. புலுசு சாம்பமூர்த்தி, திரு. ஜே. சிவசண்முகம் பிள்ளை, திரு. என். கோபால மேனன், டாக்டர் யு. கிருஷ்ணா ராவ், திரு. எஸ். செல்லபாண்டியன் இவர்கள் வழியிலே, தாங்களும், மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களும் சிறந்த முறையிலே இச்சபையை நடத்திடவேண்டும்.

> "எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
> மெய்ப்பொருள் காண்பது அறிவு"

என்ற வள்ளுவனின் வாய்மொழிக்கேற்ப மாண்புமிகு உறுப்பினர்களின் கருத்துகளைத் தாங்கள் நன்கு உணர்ந்து

அனைவருக்கும் சம வாய்ப்பளித்து செயல்பட வேண்டுமென்று கூறி, மீண்டும் ஒரு முறை எனது நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த இனிய வேளையில், சமத்துவ மக்கள் கட்சிக்கு இரண்டு இடங்கள் கொடுத்து, எனது இந்தக் கன்னிப் பேச்சுக்கு காரணமாக இருந்த மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களுக்கு என் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மூன்றாவது முறையாக முதலமைச்சராகப் பதவியேற்றிருக்கும் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவரான என் இனிய நண்பர், திரு. விஜயகாந்த் அவர்களுக்கும், மாண்புமிகு பேரவை உறுப்பினர்களுக்கும் என் நல்வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொண்டு, என்னையும், எங்கள் இயக்கத்தின் துணைத் தலைவரான திரு. எர்ணாவூர் நாராயணன் அவர்களையும் தென்காசியிலும், நாங்குநேரியிலும் தேர்ந்தெடுத்த எங்கள் வாக்காளர்களுக்கும், சிறந்ததொரு நல்லாட்சியை அமைத்திட்ட தமிழக மக்களுக்கும் நன்றிதனைத் தெரிவித்து விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-20

***மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “மக்களே, மக்களுக்காக, மக்களால் நடத்தும் ஆட்சி மக்களாட்சி” என்று கூறியவர் முன்னாள் அமெரிக்க குடியரசுத் தலைவர் ஆப்ரகாம் லிங்கன். இப்படிப்பட்ட மக்களாட்சி மலர்வதற்கு முன், பல்வேறு வகையான ஆட்சிகள் பல அமையப் பெற்றிருந்தாலும், அவை அனைத்தும் மக்கள் கருத்துகளுக்குச் செவி சாய்க்காத ஆதிக்க ஆட்சிகளாகவே திகழ்ந்தன. மக்களாட்சி ஏற்பட்ட பின்பும், தனி மனிதன் ஆதிக்கம் செலுத்தும் ஆட்சிகள், மக்களாட்சி என்ற போர்வையில், பல்வேறு இடங்களில் நடைபெற்றே வந்துள்ளன. ஒரு குடும்பம் ஆதிக்கம் செலுத்தும், “குடும்ப ஆட்சி” கூட ஜனநாயகத்திற்கு விரோதமாக, மக்களின் பொது நன்மைக்கு எதிராக, ஜனநாயகத்தின் அடிப்படைத் தத்துவத்திற்கு முரணாக, மக்களாட்சி போன்ற தோற்றத்தில் அமைக்கப்படுவதுதான்.



மிக அதிகமானவர்களுக்கு, மிக அதிக நன்மையைப் பயப்பதுதான் உண்மையான மக்களாட்சி. இப்படிப்பட்ட மக்களாட்சி முறையைச் செயல்படுத்தும் மன்றம் இந்தச் சட்டமன்றம். ஓர் அரசாங்கத்தை தங்கு தடையின்றி நடத்தி, பலதரப்பட்ட கட்சிகளின் கருத்துகளைப் பெற்று, மக்கள் பயன்பெறும் வகையில் சட்டங்கள் இயற்றி, ஜனநாயகத்தின் இதயமாகவும், மூளையாகவும் செயல்படுகின்ற மன்றம் இந்தச் சட்டமன்றம். இப்படிப்பட்ட பெருமை வாய்ந்த, வரலாற்றுச் சிறப்புமிக்க, இந்தச் சட்டமன்றத்தின் தலைவராக தாங்கள் ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளீர்கள். தங்களுடைய தேர்வுக்கு எனது மனமார்ந்த மகிழ்ச்சியினையும், பாராட்டினையும் முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாங்கள் பேரவைத் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டவுடன், அவை முன்னவரும், எதிர்க்கட்சித் தலைவரும் தங்களுடைய கரங்களைப் பிடித்து, தங்களை அழைத்துச் சென்று சபாநாயகர் ஆசனத்தில் அமர வைத்தார்கள். இது சம்பிரதாயமாக நடைபெறுகின்ற ஒரு நடைமுறை. நாடாளுமன்ற மக்களவையானாலும், மாநிலங்களிலுள்ள சட்டமன்றப் பேரவையானாலும், சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்படுபவரை அவை முன்னவரும், எதிர்க்கட்சித் தலைவரும் கரம் பிடித்து அழைத்துச் சென்று ஆசனத்தில் அமர வைப்பது வழக்கம். இந்தச் சம்பிரதாயம் எப்படி வந்தது? இந்தப் பழக்கம் எப்படி வந்தது என்பதை எடுத்துச் சொன்னால் அனைவருக்கும் மிகவும் சுவாரசியமாக இருக்கும் என்று கருதுகிறேன். இந்த மரபுக்குப் பின்னால் ஒரு பெரிய வரலாறே இருக்கிறது.

நம்முடைய இந்திய ஜனநாயகம் என்பது பிரிட்டிஷ் ஜனநாயகத்தைப் பின்பற்றியே அமைக்கப்பட்டது. இங்கிலாந்து நாட்டில் உள்ள பாராளுமன்றம் எவ்வகையில் அமைக்கப்பட்டதோ அதே வகையில் அமைக்கப்பட்டதுதான் இந்திய பாராளுமன்றமும், இந்திய சட்டமன்றங்களும். அங்கே, இங்கிலாந்து நாட்டில் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே பாராளுமன்றம் வந்துவிட்டது. அது மன்னர் ஆட்சி இருந்த காலம். சர்வ வல்லமை படைத்த மன்னரும் இருப்பார். பாராளுமன்றமும் இருக்கும். இங்கே இந்தியாவில் அந்த முறையைப் பின்பற்றியபோது மன்னர் இல்லை. ஜனாதிபதி

இருக்கிறார். பின்னர் பாராளுமன்றம் இருக்கும். அந்தக் காலத்தில் இங்கிலாந்து நாட்டில், மன்னர் ஏதாவது ஒரு காரியத்தைச் செய்யவேண்டுமென்று விரும்புவார். அதற்கு பாராளுமன்றத்தின் அனுமதி வேண்டும். பெரும்பாலும் பாராளுமன்றத்தில் உறுப்பினர்கள் மன்னருடைய விருப்பத்தை நிராகரித்துவிடுவார்கள். இந்தச் செய்தியை யார் போய் மன்னரிடம் கூறுவது? அவர்தான் பேரவைத் தலைவர். அதனால்தான் பாராளுமன்றத் தலைவர் என்று பெயரை வைக்காமல் Speaker என்று பெயர் வைத்தார்கள். ஏனென்றால், பாராளுமன்றத்தின் கருத்து என்னவோ அதைச் சென்று மன்னரிடம் எடுத்து உரைப்பவர்தான் Speaker. நாம்தான் இங்கே பேரவைத் தலைவர் என்று அழைக்கிறோமே தவிர, இன்று வரை அங்கே வெளிநாட்டில், இங்கிலாந்தில் Speaker என்றுதான் அழைக்கிறார்கள்.

முற்பகல் 10-25

மன்னர் எதை விரும்பினாரோ அதைச் செய்ய இயலாது என்று ஒரு Speaker சென்று துணிச்சலுடன் மன்னரிடம் கூறும்போது என்ன நடக்கும்? சில காரியங்கள் செய்வதற்குத்தான் மன்னருக்கு பாராளுமன்றத்தின் அனுமதி வேண்டுமே தவிர, அந்த ராஜ்யத்தில் உள்ள எந்தப் பிரஜைக்கும் மரண தண்டனை விதிக்கும் அதிகாரம் மன்னருக்கு உண்டு. ஆகவே, தான் விரும்பியது நடக்காது என்று Speaker எடுத்துரைக்கும்போது, உடனே மன்னர் அவருக்கு மரண தண்டனை விதிக்கும்படி ஆணையிடுவார். ‘தலையை வெட்டி எடுங்கள்’ என்று ஆணையிடுவார். இது பலமுறை நடந்ததால் யாருமே அந்த Speaker பதவிக்கு வர விரும்ப மாட்டார்கள். ஆகவே, புதிதாக பாராளுமன்றம் அமையும்போது ஒரு Speaker-ஐத் தேர்ந்தெடுக்கும்போது இன்னார்தான் Speaker என்று அறிவித்தவுடன், அவர் உடனே தப்பித்தால் போதும், தலை தப்பித்தால் போதும் என்று ஓட்டம் பிடிப்பார். அப்போது அவை முன்னவரும், எதிர்க்கட்சித் தலைவரும் அவரை ஓடவிடாமல் தடுத்து நிறுத்தி, அவர் கைகளைப் பிடித்து இழுத்து வந்து ஆசனத்தில் அமர வைப்பார்கள். இதுதான் அந்தக் காலத்தில் இருந்துவந்த மரபு. காலப்போக்கில் அது மாறி இப்போது ஜனநாயக முறை ஏற்பட்ட பிறகு, Speaker இப்போது ஓட்டம் பிடிக்கவேண்டிய அவசியமும் இல்லை, Speaker–ன் தலையை எடுங்கள் என்று சொல்லக்கூடிய மன்னரும் இங்கே இல்லை. ஆனால், அவை முன்னவரும், எதிர்க்கட்சித் தலைவரும் பேரவைத்



தலைவரின் கரங்களைப் பிடித்து ஆசனத்தில் அமர வைக்கும் மரபு மட்டும் அப்படியே இருக்கிறது. பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுங்கட்சி உறுப்பினர்களின் சார்பில் உங்களுக்கு வாக்குறுதி அளிக்கிறேன். நீங்கள் தப்பித்தால் போதும் என்று ஓட்டம் பிடிக்கும் சூழ்நிலையை நிச்சயமாக நாங்கள் எந்த நாளிலும் உருவாக்க மாட்டோம். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அவையிலே ஆளும் கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்களும் இருக்கிறார்கள். எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த உறுப்பினர்களும் இருக்கிறார்கள். ஓர் உண்மையான மக்கள் அரசு எவ்வாறு வாக்களித்தோருக்கும் வாக்களிக்காதோருக்கும் பொதுவாகச் செயல்படுகிறதோ அதேபோன்று இந்த அவையிலே உள்ள அனைத்து சாராருக்கும் பொதுவானவர் நீங்கள். பேரவையின் மாண்பையும், கண்ணியத்தையும் பேரவை உறுப்பினர்களின் மதிப்பையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பை இந்த மாமன்ற உறுப்பினர்கள் உங்களிடத்தில் ஒப்படைத்திருக்கிறார்கள். பேரவையின் தலைவர் என்பவர் எவ்வாறு நடுநிலையோடு விளங்கவேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்கியவர் திரு. ஜே. சிவசண்முகம் பிள்ளை அவர்கள். அவரைப் பொறுத்தவரை அமைச்சரும் ஒன்றுதான், உறுப்பினரும் ஒன்றுதான். ஆளுங்கட்சி உறுப்பினர், எதிர்க்கட்சி உறுப்பினர் என்ற வித்தியாசமின்றி, தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் கண்டிப்புடன் நடந்துகொள்வார் என்பதை நான் கேள்விப்பட்டிருக்கிறேன். இவரைப் போலவே டாக்டர் யு. கிருஷ்ணா ராவ் அவர்களும் நடுநிலையோடு அவையை நடத்தி அனைத்து உறுப்பினர்களின் பாராட்டினையும் பெற்றிருக்கிறார். இதேபோன்று திரு. எஸ். செல்லபாண்டியன் அவர்களும் அவையை நடுநிலையோடு நடத்தியதில் தனி முத்திரையைப் பதித்திருக்கிறார். இந்த வரிசையில் அனைத்து உறுப்பினர்களின் அன்பையும் பெற்றவராகத் திகழ்ந்தவர் மறைந்த டாக்டர் கா. காளிமுத்து அவர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கும் தாங்கள், சாதாரண நடுத்தரக் குடும்பத்தில், மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தில் பிறந்து, வழக்கறிஞர் பட்டம் பெற்றவர். நான்கு முறை இந்த மாமன்றத்தின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, இரண்டு முறை, அதாவது பத்தாண்டு காலம், அமைச்சராகப் பணியாற்றி இருக்கிறீர்கள். குறிப்பாக, சட்ட

அமைச்சராகப் பணியாற்றிய அனுபவம் தங்களுக்கு உண்டு. மூன்றாவது முறை, எதிர்க்கட்சி வரிசையிலே அமர்ந்து, ஆளுங்கட்சியின் குறைகளை, அராஜகங்களைச் சுட்டிக்காட்டிய அனுபவமும் தங்களுக்கு உண்டு. சுருக்கமாகச் சொல்லவேண்டுமென்றால், ஆளுங்கட்சியின் அமைச்சராக இருந்த அனுபவமும், எதிர்க்கட்சி உறுப்பினராகப் பணியாற்றிய அனுபவமும் தங்களுக்கு உண்டு. இருசாராரின் மன நிலையையும் தாங்கள் நன்கு அறிந்தவர் என்பதால், நான்காவது முறை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நீங்கள், பேரவைத் தலைவராக இன்று ஏற்றிருக்கின்ற இந்தப் பொறுப்பை மிக நல்ல முறையில் நிறைவேற்றுவீர்கள், அனைவரது பாராட்டினையும் தாங்கள் நிச்சயம் பெறுவீர்கள் என்று நம்புகிறேன்.

சீர்மிக்க இந்த அவையின், இழந்த பழம் புகழை, மீட்பதற்கான பக்குவத்தினையும், பயிற்சியினையும் தாங்கள் பெற்றிருக்கிறீர்கள். தங்களுடைய சட்டமன்ற அனுபவமும், அனைவரிடத்திலும் அன்பாகப் பழகும் தங்களுடைய குணமும், இந்தப் பேரவையை நல்ல முறையில் நடத்திச் செல்ல நிச்சயம் உறுதுணையாக இருக்கும்.

*முற்பகல் 10-30*

திரு. ஜே. சிவசண்முகம் பிள்ளை, டாக்டர் யு. கிருஷ்ணா ராவ், திரு. எஸ். செல்லபாண்டியன், திரு. என். கோபால மேனன் போன்றவர்கள் எல்லாம் இந்தப் பேரவையின் கண்ணியத்தை எப்படிக் காத்தார்கள்; அதே சமயத்தில் கனிவுடனும், கண்டிப்புடனும் எப்படி நடந்துகொண்டார்கள் என்பதைக் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதிகள், மரபுகள், நெறிமுறைகள் ஆகியவற்றையெல்லாம் அலசி, ஆராய்ந்து,

> "குணம்நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
> மிகைநாடி மிக்க கொளல்"

என்ற வள்ளுவரின் வாய்மொழிக்கேற்ப, சட்டமன்ற நடவடிக்கைகள் சீராக, செம்மையாக, அமைதியாக நடைபெறும் வகையிலும், சட்டமன்ற ஜனநாயகப் பண்புகள், நெறிமுறைகள் பேணிப் பாதுகாக்கப்படும் வகையிலும், இந்த அவைக்குத் தாங்கள் பெருமை சேர்ப்பீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.



ஆளும் கட்சி அமோக வெற்றி பெற்றுவிட்டது; எதிர்க்கட்சியினருக்கு மிகக் குறைந்த இடங்களே கிடைத்துள்ளன என்ற சூழ்நிலை தற்போது நிலவினாலும், "மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு" என்ற பேரறிஞர் அண்ணா அவர்களின் அமுத மொழிக்கேற்ப, எதிர்க்கட்சியினரின் கருத்துகளுக்கு மதிப்பளிக்க ஆளுங்கட்சி தயங்காது என்பதையும், (மேசையைத் தட்டும் ஒலி) சட்டமன்ற ஜனநாயகம் வாழவும், வளரவும், வளம் பெறவும், நிலைத்து நிற்கவும் நாங்கள் உறுதுணையாக இருப்போம் என்பதையும் தங்கள் வாயிலாக இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தங்களுக்குத் துணையாக, பக்க பலமாக, ஏழை, எளிய விவசாயக் குடும்பத்தில், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தில் பிறந்து, முதுகலைப் பட்டம் பெற்றவரும்; ஏற்கெனவே கூட்டுறவு, உணவு, நுகர்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சராகப் பணியாற்றியவரும்; இதற்கு முன்பு நான்கு முறை சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றிய அனுபவம் வாய்ந்தவருமான திரு. ப. தனபால் அவர்கள் பேரவைத் துணைத் தலைவராக ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றார். அவருக்கும் எனது மனமார்ந்த பாராட்டினைத் தெரிவித்துக்கொள்வதோடு, கடமை உணர்வோடு பணியாற்றி, அனைவரது பாராட்டினையும் அவர் பெறவேண்டும் என்று மனதார வாழ்த்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்சி சார்பற்ற நடுநிலையை இந்த அவையில் தாங்கள் கடைப்பிடிக்க வேண்டும் என்ற என் அவாவினைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த அவையின் வரலாற்றில், கடந்த ஐந்து ஆண்டு காலத்தில், நடுநிலை எப்படி கடைப்பிடிக்கப்பட்டது என்பதைத் தாங்கள் நன்கு அறிவீர்கள். எதிர்க்கட்சி உறுப்பினர்கள் என்றாலே எட்டிக்காய் போன்ற கசப்புணர்வு காணப்பட்டது. எதிர்க்கட்சி உறுப்பினர்களை ஒட்டுமொத்தமாக வெளியேற்றியது; அவை நடவடிக்கையையே சில மணித் துளிகளுக்கு ஒத்திவைத்தது; "மைனாரிட்டி" என்ற சொல்லை சட்டமன்ற மரபிற்கு ஒவ்வாத சொல்லாகப் பாவித்தது, தமிழ்ப் பண்பாட்டையே சீர்குலைக்கும் வகையில் வணக்கம் தெரிவித்தால், பதில் வணக்கம்கூட தெரிவிக்காதது என பல மரபு மீறிய, விதிகளுக்கு முரணான சம்பவங்கள் இந்த சட்டமன்றப் பேரவையில் நிகழ்த்தப்பட்டன.

எதிர்க்கட்சி உறுப்பினர்களைப் பொறுத்தவரையில், 'ம்' என்றால் வெளியேற்றம், 'ஏன்' என்றால் தற்காலிகப் பணி நீக்கம், என்ற நடைமுறைதான் கடந்த ஐந்தாண்டு காலத்தில் கடைப்பிடிக்கப்பட்டது. இவற்றையெல்லாம் நான் இங்கே சுட்டிக்காட்டுவதற்குக் காரணம், யாரையும் குற்றம் சாட்டவேண்டும், குறை கூறவேண்டும் என்பதற்காக அல்ல. அரசியலுக்கு அப்பாற்பட்டு, மனிதர்களை மதிக்கும் நல்ல பண்புகள் நிலைநாட்டப்பட வேண்டும், தமிழ்ப் பண்பாடு போற்றப்பட வேண்டும், அவையின் மரபும், மாட்சிமையும், மதிப்பும் காக்கப்பட வேண்டும் என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில்தான் இதையெல்லாம் எடுத்துக் கூறுகிறேன் என்பதைத் தங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அவ்வாறே இப்பேரவையின் மாண்பினைத் தாங்கள் மீண்டும் நிலைநிறுத்துவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.

தவறு நிகழ்ந்தபின் தண்டிப்பது என்ற தத்துவத்தைவிட, தவறு நிகழாதபடி கண்டிப்பது என்பது மிகவும் சிறந்தது என்பதைச் சுட்டிக்காட்டி, நாணயமான தராசு முள் போல், எந்தப் பக்கமும் சாயாமல் தீர்ப்புக் கூறுவதுதான் உண்மையான நடுவுநிலைமை என்ற வள்ளுவப் பெருந்தகையின் கூற்றிற்கேற்ப தங்களின் பணி அமைய வேண்டும்; நடுநிலை தவறாமல், நல்லதைப் பாராட்டி, தவறைத் தட்டிக் கேட்கும் "சபாநாயகராக", "நடுநிலை நழுவா நாயகராக" தாங்கள் விளங்கவேண்டும்; தங்களது நடுநிலைப் பணி பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டும்; இதைத் தாங்கள் நிச்சயம் நிறைவேற்றுவீர்கள் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு என்பதைத் தெரிவித்து, தங்களையும், பேரவைத் துணைத் தலைவரையும் மீண்டும் ஒரு முறை மனதாரப் பாராட்டி, வரவேற்று, என்னை இந்தப் பேரவைக்குத் தேர்ந்தெடுத்து அனுப்பிய ஸ்ரீரங்கம் தொகுதி வாக்காளர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்து, (மேசையைத் தட்டும் ஒலி) மிகப் பெரும்பான்மையோடு இங்கே ஆட்சி அமைக்க இத்தனை சட்டமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து இந்த அவைக்கு அனுப்பிய வாக்காளப் பெருமக்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவித்து, எனது உரையை நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.





*முற்பகல் 10-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் நன்றியுரையாற்றுவார்கள்.

***மாண்புமிகு திரு. ப. தனபால் (பேரவைத் துணைத் தலைவர்):** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையிலே நடைபெற்ற சட்டமன்றப் பேரவையினுடைய துணைத் தலைவர் தேர்தலிலே என்னை துணைத் தலைவராகத் தேர்ந்தெடுத்த அத்தனை உறுப்பினர்களுக்கும் முதற்கண் என் மனமார்ந்த நன்றியை நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து, என்னைத் தேர்ந்தெடுத்த ராசிபுரம் தொகுதியினுடைய வாக்காளர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றியை நான் பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலிலே இதய தெய்வம் புரட்சித் தலைவி மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு தர்ம யுத்தத்தை நடத்தினார்கள். அந்த தர்ம யுத்தத்திலே இன்றைக்கு வரலாறு காணாத வெற்றியை அவர்கள் பெற்று, இப்போது 3-வது முறையாக இந்த அவையிலே அவர்கள் தமிழக முதல்வராக வந்து அமர்ந்து, என்னையும், உங்களையும் இந்த அவைக்குத் தலைவராகவும், பேரவைத் துணைத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கின்ற வாய்ப்பை உருவாக்கித் தந்திருக்கிறார்கள். அதற்காக புரட்சித் தலைவி மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்களுக்கு என்னுடைய வணக்கத்தையும், நன்றியையும் பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த 14-வது சட்டமன்றம் அமைக்கப்பட்டு தாங்கள் அமர்ந்திருக்கிற இந்த நாற்காலி லேடி வெலிங்டன் அவர்களாலே அளிக்கப்பட்டது என்ற விவரங்களை எல்லாம் சொல்லி, பிரிட்டிஷ் நாடாளுமன்றத்திலே பெருமையோடு சொல்லப்படக்கூடிய, அந்த ஆட்சியாளர்களால் வழங்கப்பட்டு பயன்படுத்தப்பட்ட, இந்த அவையினுடைய ஆசனத்திலே அமருகிற வாய்ப்பை எனக்கு வழங்கி, சமுதாயத்திலே தாழ்த்தப்பட்டவர்களிலே மிகவும் தாழ்த்தப்பட்ட இனத்திலேயிருந்து வந்திருக்கிற என்னையும் அந்த ஆசனத்திலே அமர்த்தி, பாரம்பரியம் மிக்க, மரபு மிக்க இந்தச் சபையில் உங்களோடு சேர்த்து என்னையும் நடத்துவதற்கு அனுமதியளித்த இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா

அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய மனமார்ந்த நன்றியை நான் மீண்டும் ஒரு முறை காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்று அவர்கள் என்னை இந்த அவைக்கு துணைத் தலைவராகத் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள். இதற்கு முன்பு, சட்டமன்ற உறுப்பினராகவும், இந்த அவையிலே அமைச்சராகவும் என்னை நியமித்திருக்கிறார்கள். அவர்களுடைய தலைமையின்கீழே உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சராக என்னை நியமித்தார்கள். தமிழக அமைச்சரவை வரலாற்றிலேயே ஒரு தாழ்த்தப்பட்ட மகனிடத்திலே இவ்வளவு பெரிய பொறுப்புகளை அமைச்சரவையிலே கொடுத்ததில்லை என்ற அளவுக்கு திரு. கக்கன் அவர்களுக்குப் பின்னாலே மாண்புமிகு அம்மா அவர்கள்தான் அதைச் சாதித்துக் காட்டினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட அந்தத் தலைவி இப்போது நல்ல பதவிகளை தாழ்த்தப்பட்ட எங்களைப் போன்றவர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு ஒரு கலங்கரை விளக்கமாக அவர்கள் இருக்கிறார்கள். தாழ்த்தப்பட்ட மக்களைப் பாதுகாப்பதிலே இன்றைக்கு வாழும் அம்பேத்கராக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருந்துகொண்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நாடாளுமன்றத்தின் ராஜ்ய சபைக்குப் போன நாளிலேயிருந்து நாடாளுமன்ற ஜனநாயகத்தைக் காப்பதிலேயும், தமிழ்நாட்டின் சட்டமன்றத்திலே சட்டமன்ற மரபுகளைப் பேணிக் காப்பதிலேயும் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தனக்கென ஒரு தனிப் பாணியை அமைத்து இன்றைக்கு இந்த அவை மரபுகளைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறார்கள். மரபுகளுக்கு என்றைக்குமே மரியாதை கொடுக்கின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தலைமையின்கீழே நீங்களும், நானும் பேரவைத் தலைவராகவும், துணைத் தலைவராகவும் பணியாற்றுவதற்கு வாய்ப்புத் தந்ததுடன், இந்த மன்றத்தின் மரபுகளைப் பாதுகாப்பதற்கு வழிகாட்டியாக அவர்கள் இருப்பார்கள் என்ற நம்பிக்கையையும் தெரிவித்துக்கொள்கிறேன். அத்துடன், இந்த மன்றத்திலே என்னையும், உங்களையும் தேர்ந்தெடுத்த அத்தனை பேருக்கும் என்னுடைய நன்றியை மீண்டும் ஒரு முறை காணிக்கையாக்குகிறேன்.

எனக்கு இவ்வளவு பெரிய பதவி வழங்கிய என்னுடைய வீட்டினுடைய குலதெய்வமாக இருக்கிற எங்களுடைய தாய், இதய





தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய குடும்பத்தின் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியை மீண்டும் ஒரு முறை அவர்களுடைய மலர்ப் பாதங்களிலே பணிவன்போடு சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

இன்றைக்கு இங்கே எங்களைப் பாராட்டியிருக்கிற எதிர்க்கட்சித் தலைவர்களுக்கும், மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் நான் மீண்டும் ஒரு முறை நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அவையிலே, நீங்கள் சொன்ன அத்தனை காரியங்களையும்,--மரபுகளையும், கண்ணியத்தையும் காக்கிறவகையிலே என்னுடைய பணிகள் சிறப்பாக இருக்கும் என்ற உறுதியை மீண்டும் ஒரு முறை தெரிவித்துக்கொண்டு, நானும் பேரவைத் தலைவர் அவர்களும் இணைந்து அந்தப் பாரம்பரியத்தைக் கட்டிக் காப்போம் என்ற உறுதியை மீண்டும் தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

*முற்பகல் 10-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னை வளர்த்த அன்னைத் தமிழே! தாயே! உன் அடிபணிந்து வணங்குகிறேன்.

“மாநிலங்கா வலனாவான் மன்னுயிர் காக்குங்காலைத்
தானதனுக்கு இடையூறு தன்னால்தன் பரிசனத்தால்
ஊனமிகு பகைத்திறத்தால் கள்வரால் உயிர்தம்மால்
ஆனபயம் ஐந்தும்தீர்த்து அறங்காப்பான் அல்லனோ?”

இது பெரியபுராணம் சொல்லும் செய்தி. தன்னால், தன் உறவினர்களால், பகைவர்களால், விலங்குகளால், திருடர்களால் ஆன ஐந்து பயத்தையும் போக்கி, சுபிட்சமான நல்லாட்சியை மக்களுக்குத் தருபவரே, மாநிலத்தைக் காக்கின்ற மகத்தான மன்னராவார் என்றே நீதியுரைத்தது பெரியபுராணம். இவ்வரிகளுக்கு முற்றிலுமாய்ப் பொருந்துகிற இலக்கணமாய் இங்கே வீற்றிருக்கும் மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவை முன்னவர் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே, பல்வேறு கட்சிகளின் தலைவர் பெருமக்களே, மாண்புமிகு உறுப்பினர்களே, அரசு அலுவலர்களே,

பத்திரிகை துறையைச் சார்ந்த இனிய நண்பர்களே, உங்கள் அனைவருக்கும் முதற்கண் என்னுடைய அன்பு கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டமன்றப் பேரவையின் தலைவராக ஏகமனதாக என்னைத் தேர்ந்தெடுத்தமைக்காக உங்கள் அனைவருக்கும் மற்றும் என்னை நான்காவது முறையாக சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுத்த அன்பில் சிறந்த இராயபுரம் தொகுதி மக்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நான் அமர்ந்துள்ள இந்த ஆசனத்தில் அருங்குணங்களைக் கொண்ட சான்றோர்கள், பெருமை மிக்கவர்கள் எல்லாம் இங்கே அவைத் தலைவர்களாக சிறப்புறப் பணியாற்றியுள்ளார்கள். அப்படிப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க அவையினுடைய பெருமையை அனைவரும் இங்கே விரிவாக எடுத்துரைத்தீர்கள். கடந்த காலங்களில் நான் சட்டமன்ற உறுப்பினராகவும் மற்றும் அமைச்சராகவும் பணியாற்றியதையும் நினைவுகூர்ந்தீர்கள். பேரவையின் தலைவராக உள்ளவர், நடுநிலை தவறாமல் செயல்படவேண்டிய பொறுப்பில், கடமையில் இருக்க வேண்டும் என இந்தப் பொறுப்பை நான் ஏற்பதற்கு முன்னரே, அம்மா அவர்கள் எனக்கு அறிவுரை வழங்கியுள்ளார்கள். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்னும் சீரிய கோட்பாடுகளுக்குப் பேரவைத் தலைவர் பணி என்பது பெருமை சேர்க்கின்ற பணியாகும் எனப் பேரறிஞர் அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள்.

இந்திய பாராளுமன்றத்தின் முதல் அவைத் தலைவர் திரு. மாவலாங்கர், பேரவைத் தலைவர் பணியினைப் பற்றிக் கூறுகையில் "A quick grasp of the question at issue, presence of mind, infinite patience, a sense of humour etc. will make a Speaker both great and popular and if he sustains patience almost to an infinite degree and a sense of humour, he will be able not only to discharge his duties to the satisfaction of all, but to feel genuine pleasure in his work" என்று கூறுகிறார். இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டு, மிகுந்த கண்ணியத்துடனும், கட்டுப்பாட்டுடனும், கடமை உணர்ச்சியுடனும் என்னுடைய பணிகளை ஆற்றுவேன் என்றும் மற்றும் மாண்புமிகு உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துகளையும் கவனத்தில் கொள்வேன் என்பதையும் இத்தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.



மன்னராட்சி மறைந்துவிட்டாலும்கூட இங்கிலாந்து நாட்டில் ஒரு சரித்திர அடையாளமாக இன்றும் கூட அரசி இருக்கிறார். சிலரது பார்வையில் சில சரித்திரச் சின்னங்கள் அகற்றப்பட வேண்டியவையாக இருக்கலாம். இது அவர்களின் பார்வைக் கோளாறாக இருக்கலாம். ஆனால், பழம்பெருமை வாய்ந்த இப்பேரவைக்கு மேலும் பெருமை சேர்க்கும் வகையில் மீண்டும் இப்பேரவையை தமிழக மக்கள் விரும்பியவண்ணம் இந்தக் கோட்டையிலேயே இயக்க மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் எடுத்த முடிவு தமிழக மக்கள் அனைவராலும் பாராட்டப்படுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமன்றப் பேரவையின் மூலமாகத்தான் நம்முடைய ஜனநாயக ஆட்சி முறையை நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம். இந்த அவையிலே விவாதிக்கப்படுபவை மக்கள் மத்தியில் அதிக எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளன. மாண்புமிகு உறுப்பினர்கள், மக்களுக்காக விவாதிக்க வந்திருக்கிறார்கள். ஆளுங்கட்சியாக இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும், நிச்சயமாகப் பாகுபாடு இல்லாமல் மக்கள் பிரச்சினைகளை எடுத்து வைக்க எல்லோருக்கும் உரிமை வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும், பேரவையைச் சிறப்பாக நடத்துகிற குணநலன் உங்கள் அனைவரின் ஒத்துழைப்பால் எனக்குக் கிட்டும் என நம்புகிறேன்.

முற்பகல் 10-45

2001 ஆம் ஆண்டு மே திங்கள் 24 ஆம் நாள் இதே பேரவையில் மாண்புமிகு அம்மா அவர்கள் பேரவைத் தலைவரைப் பாராட்டிப் பேசுகையில், "மதிப்புமிக்க பேரவையின் உணர்வுகளைப் பிரதிபலிப்பவராகவே மாண்புமிகு பேரவைத் தலைவரை உறுப்பினர்கள் எப்போதும் கருதுவார்கள் என்றும், எந்த நேரத்திலும், எப்படிப்பட்ட தருணத்திலும் அவையின் மாண்பைப் பாதுகாப்பதில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் உறுதியோடு செயலாற்ற வேண்டும்" எனக் குறிப்பிட்டதை நான் என் நினைவில் கொண்டு செயல்படுவேன்.

கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கைக்கு ஏற்ப வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் என மரபு இருந்தாலும், மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் "எங்களைப் பொறுத்தவரை, ஜனநாயக மரபுகளில் நம்பிக்கை உடையவர்கள்

நாங்கள்; பேரறிஞர் அண்ணா அவர்களும், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களும் கற்றுத் தந்த நெறிமுறைகளை, சீரிய பண்புகளை நாம் மறந்ததில்லை. எங்களிடமிருந்து பொறுப்பேற்றுள்ள பேரவைத் தலைவரும் மறக்கமாட்டார்" எனக் குறிப்பிட்டதை இங்கே அவையின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். எதிர்க்கட்சிகள் குறைவான உறுப்பினர்களைக் கொண்டிருந்தாலும் மாண்புமிகு அம்மாவின் அறிவுரையை ஏற்று, எதிர்க்கட்சி உறுப்பினர்கள், விவாதத்தில் பங்குபெற உரிய வாய்ப்பு அளிக்கப்படும் என்கின்ற உறுதியையும் இங்கே அளிக்க விரும்புகிறேன்.

இந்தப் பேரவையில் மிகுந்த அனுபவமுடைய உறுப்பினர்கள் பலர் இருக்கிறீர்கள். முதன் முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்துள்ள உறுப்பினர்களும் உள்ளார்கள். எனவே, பேரவையின் மரபுகளை நன்கறிந்த முதிர்ந்தவர்கள், இளையவர்களுக்கு நிச்சயம் வழிகாட்டிகளாக இருப்பார்கள் என்று நம்புகிறேன்.

இன்றைய குடியாட்சி முறையை அன்றைய முடியாட்சிக் காலத்திலேயே குடவோலை என்னும் முறையால் வாரிய உறுப்பினர்களை, அறவொழுக்கம் உடையோரை ஊர் நடுவே குடம் வைத்து, ஊர் கூடி தேர்தல் நடத்தி, தேர்ந்தெடுத்து, அன்றைய மன்னராட்சி காலத்திலேயே ஒரு மக்களாட்சித் தத்துவத்தைப் பின்பற்றி நின்ற எல்லையில்லாப் பெருமைகளும், வரலாற்றுச் சிறப்புகளும் கொண்ட இம்மாநிலத்தில் சட்டமன்ற உறுப்பினர்களாய் அமருகின்ற பாக்கியம் பெற்றிருக்கும் அனைவரையும் வரவேற்று மகிழ்கின்றேன்.

அன்பாலும், பண்பாலும், தொண்டாலும், தூய நெஞ்சாலும் இவ்வுலகைப் பேரின்ப வீடாக மாற்ற முடியும் என்ற எண்ணத்தைக் கொண்ட எண்ணற்ற பெருந்தகைகள் அமர்ந்து ஆராய்ந்து, செங்கோல் செலுத்திய இப்புனித ஜார்ஜ் கோட்டையில் உருகும் மெழுகாய் தியாகம், உருளும் பூமியாய் உழைப்பு, பொழியும் மழையாய் கருணை, எரியும் நெருப்பாய் கர்ஜனை, ஆழ்கடலாய் அறிவு, குளிர்ந்த நிலவாய்ப் பரிவு, எல்லாம் சேர்ந்ததோர் உருவில் எங்கள் அம்மா என்னும் ஓர் வடிவில் *(மேசையைத் தட்டும் ஒலி)* என்றே இம்மாநில மக்கள் ஏற்றுப் புகழ் பாடுகிற ஒரு மனிதப் புனிதரின் தலைமையில் மீண்டும் ஒரு மகத்தான அரசாட்சி அமைந்திருக்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)*



உபநிஷத் காலத்தில் வாழ்ந்ததாகக் கூறப்படும் தைத்ரியப் பறவை, கடினமான உணவுப் பொருட்களை மென்று கூழாக்கி, மென்மைபடுத்தி தன் குஞ்சுகளுக்கு ஊட்டி மகிழுமாம். அந்த தியாகமிக்க தாய்மை உணர்வு மேலோங்கிய தைத்ரியப் பறவைகள் இவ்வுலகில் இப்போது இல்லை என்றாலும், அப்பறவையின் குணம் கொண்டு எண்ணற்ற இடர்களை, திரண்டு வந்த தடைகளை, தொடுக்கப்பட்ட துன்பங்களை, தான் ஒருவரே தாங்கிக்கொண்டு இம்மாநிலத்து மக்கள் எல்லா வளமும் பெற்று வாழ தன்னைத் தந்து உழைக்கின்ற ஒரு தாயின் தலைமையில் *(மேசையைத் தட்டும் ஒலி)* இம்மண் வழி நடத்தப்படுவதில் மட்டற்ற மகிழ்வை தமிழக மக்களோடு சேர்ந்து நாமும் பெறுகிறோம். *(மேசையைத் தட்டும் ஒலி)*

திட்டமிட்ட பணிகளைச் செய்து முடித்தலும், எதிர்பார்த்து நிற்கின்ற மக்களின் மனங்களை குளிர்வித்தலும் ஒன்றே தனது குறிக்கோள் என நல்லாட்சி நடத்துவதற்கு தன்னையே அர்ப்பணிக்கும் நம் தாயின் பெருமுயற்சிக்கு தமிழக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட இப்பேரவையின் மாட்சிமைமிக்க உறுப்பினர்கள் பக்க துணைநின்று பணியாற்ற இருகரம் கூப்பி வணங்கி அனைவருக்கும் நன்றி கூறி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் *(3-6-2011)* வெள்ளிக்கிழமை காலை *10-00* மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை முற்பகல் 10-48 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

---